**செ.வெ.எண்: 497** **நாள் : 30.12.2020**

# ஆதிதிராவிடர் நலத் துறையில் சமையலர் மற்றும் துப்புரவாளர் பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

---

திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகளுக்கு 33 (ஆண்–25, பெண்–8) சமையலர் பணியிடங்கள் 15700–50000 என்ற ஊதிய பிணைப்பில் ரூ.15,700/– ஊதியத்திலும் மற்றும் 4 (ஆண்–2, பெண்–2) பகுதி நேர துப்புரவாளர் பணியிடங்கள் ரூ.3000/– தொகுப்பூதியத்திலும் பூர்த்தி செய்வதற்கு தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

- விண்ணப்பதாரர் தமிழில் எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்
- சமையலர் பணியிடத்திற்கு அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமைத் தரப்படும்.
- 18 வயது முதல் 35 வயது வரை உள்ளவர்களாக இருக்க வேண்டும்.
- திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டத்தில் குடியிருப்பவராக இருக்க வேண்டும்.

தகுதியான நபர்கள் திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் விண்ணப்பங்களை பெற்று நேரடியாகவோ, பதிவஞ்சல் மூலமாகவோ திருநெல்வேலி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திற்கு **12.01.2021 –**க்குள் விண்ணப்பித்திட மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

வெளியீடு : செய்திமக்கள் தொடர்பு அலுவலகம்,
திருநெல்வேலி மாவட்டம்.